★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஜனவரி 15 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 89 இல. 13 | January 15, Friday, 2021 | 20பக்கங்கள் | 30/-

உங்கள் அபிமான மாத இதழ்
வண்ண வானவில் Vanna Vaanavil
கேட்டு வாங்குங்கள்...
ஜனவரி மாத இதழ்!
வாசிக்க எக்கச்சக்கமான விடயங்கள் கொட்டிக் கிடப்பது வானவில்லில் மட்டுமே!


சுகாதார வழிமுறைகள் பின்பற்றலுடன்

## சுற்றுலா பயணிகளை அழைத்து வரும் நடவடிக்கைகள் தொடரும்

பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சுகாதார வழிமுறைகள் முறையாகப் பின்பற்றப்பட்டு வெளிநாடுகளிலிருந்து சுற்றுலாப்பயணிகளை அழைத்து வரும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் சுற்றுலாத்துறை தொழில் துறையை நம்பி 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் சுற்றுலாப் பயணிகளை மீண்டும் 06

## எம்.பிக்கள்,பணியாளர்களுக்கு இன்றும் PCR பரிசோதனை

பாராளுமன்றத்தில் இதுவரை 448 பேரிடம் சோதனை

பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பாராளுமன்ற ஊழியர்களுக்கு இன்றும் பீசீஆர் பரிசோதனை நடத்தப்பட இருப்பதாக படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார். ஏற்கெனவே பாராளுமன்ற பொதுச் செயலாளர் உள்ளிட்ட 448 ஊழியர்களுக்கு பரிசோதனை நடத்தப்பட்டது.



சபாநாயகர் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் 15 பேரும் PCR பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 06

முஸ்லிம் விவாக சட்டத்தை ஆராயும் ஆலோசனைக்குழு;

## சட்ட திருத்த முன்னெடுப்பு குறித்து நீதியமைச்சருடன் கலந்துரையாடல்

**ஷம்ஸ் பாஹிம்**



முஸ்லிம் தனியார் விவாக விவாகரத்து சட்டத்தை திருத்துவதற்கு நியமிக்கப்பட்டுள்ள சீர்திருத்த ஆலோசனைக்குழு அடுத்த வாரம் நீதி அமைச்சர் அலி சப்ரியை சந்தித்து சட்ட திருத்த முன்னெடுப்பு குறித்து ஆராய உள்ளதாக இதன் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி நாமிக் நபாத் தெரிவித்தார். 06

## அநீதியான முறையில் வர்த்தகம்; 14,906 பேருக்கு எதிராக வழக்கு

6 கோடி ரூபாவை அபராதமாக அறவிட நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அநீதியான வகையில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள வர்த்தகர்கள் 14,906 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. 06



# தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் முறைகேடு செய்வோர் கைகாவர்

இராணுவத் தளப



**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாடுகளிலிருந்து வருபவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளின்போது இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பில் ஆராய்ந்து அத்தகையோருக்கு எதிராக வழக்கு தொடரப்படுமென கொரோனா வைரஸ் ஒழிப்பு தேசிய செயற்பாட்டு மையத்தின்




மளிக்க முடியாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கூடாதென ஹோட்டல் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் இரண்டாவது அலையின் 06

## பிரித்தானிய கொரோனாவால் அதிக உயிரிழப்பு ஏற்படலாம்

சுகாதார பிரிவு எச்சரிக்கை



பிரிட்டனில் பரவிய கொரோனா வைரஸ் தொற்றின் புதிய மரபணு இலங்கையில் அடையாளம் காணப்பட்டிருப்பது விசேட அம்சமாகுமென தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வைரஸ் மிகவும் வேகமாக பரவக் கூடியதென்பதனால் இலங்கையில் நோயாளிகளின் எண்ணிக்கை பாரியளவு அதிகரிக்குமென மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். நோயாளிகளின் எண்ணிக்கை பாரியளவு அதிகரிப்பதுடன் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக்கூடுமென அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார். 06

கொரோனா வைரஸ் தொற்று;

## நோயாளர் எண்ணிக்கை 50 ஆயிரத்தைக் கடந்தது



43,267பேர் குணமடைவு; 247 பேர் பலி

**லோரன்ஸ் செல்வநாயம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தைக் கடந்துள்ள நிலையில் நேற்று மதியம் வரை அந்த எண்ணிக்கை 50,585 ஆக அதிகரித்துள்ளதாகவும் சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் நாயகம் 06



## புதிய நியமனங்களால் கட்சிக்குள் அதிருப்தி

மீண்டுமொரு பிளவு ஏற்பட வாய்ப்பு 03



தெற்காசியாவின் பாரிய டயர் உற்பத்தி தொழிற்சாலையாக ஹொரணையில் அமைக்கப்பட்டுள்ள ரூஜிட் டயர் உற்பத்தித் தொழிற்சாலையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று திறந்து வைத்து டயரொன்றை பரிசோதித்து பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

காத்தான்குடிக்கான

## தனிமைப்படுத்தல் ஜன.18 வரை நீடிப்பு



காத்தான்குடி பொலிஸ் பிரதேசத்தில் தற்போது அமுலிலிருக்கும் தனிமைப்படுத்தல் சட்டம், எதிர்வரும் திங்கட்கிழமை 18ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் 31ஆம் திகதி அமுலுக்கு வந்த காத்தான்குடி பிரதேச தனிமைப்படுத்தல் சட்டம், இன்று 15ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்தது.

எனினும், எதிர்வரும 18ஆம் திகதியே தனிமைப்படுத்தல் சட்டம் நீக்கம் தொடர்பாக 06

தற்போதைய ஆட்சியாளர்கள் புதிய அரசமைப்பை உருவாக்கி

## தேசிய பிரச்சினைக்கு தீர்வு கண்டால் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை

புத்திசாலித்தனமாக நடக்காவிடில் சர்வதேச அரங்கில் பேராபத்து

இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள் புத்திசாலித்தனமாக நடக்க

யிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச்

டிப்பர் - மோட்டார் சைக்கிள்

## CCTV கமராவில் பதிவாகிய விபத்து



பலாங்கொடை, பண்டாரவளை வீதியின் கிரிந்திகல பகுதியில் டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள்

## 29 நாட்களின் பின்னர் எரிக்க தயாரான சடலத்தில் வைரஸ்!

கொரோனா காரணமாக மரணித்த ஒருவரின் சடலமொன்றில் 29 நாட்களுக்குப் பின் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது சடலத்தில் கொரோனா வைரஸ்

